
# வெள்ளி விழா மலர்



PUBLIC LIBRARY
JAFFNA

## சைவ முன்னேற்றச் சங்கம்

கொழும்பு 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர் வழி நின்று

நாட்டுக்கு நற்பணியாற்றும்

சைவ முன்னேற்றச் சங்கம்

பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

RATNAM'S

146, 2nd Cross Street,

Colombo-11.

Telephone: 2 0 4 0 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

# சைவ முன்னேற்றச் சங்கம்

கொழும்பு- 2

# 'வெள்ளி விழா சிறப்பு மலர்'

## 5- 12- 77

## SILVER JUBILEE SOUVENIR

**Saiva Munnetta Sangam**

COLOMBO-2 Sri Lanka

29. 3. 53 29. 3. 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாஞ்சலி

சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் காலமெல்லாம் தொண்டாற்ற வேண்டுமென்ற பெருநோக்கோடு, பெருமக்கள் சிலரால் ஆரம்பிக்கப்பட்ட சைவ முன்னேற்றச் சங்கம் இன்று கால் நூற்றாண்டு கால எல்லையைக் கடந்து, கால் அடி எடுத்து வைக்கும் இவ்வெள்ளி விழாத் திருநாளில்,

சங்கத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது தங்கள் உழைப்பையும் ஊக்கத்தையும் தந்து உதவி, இன்று இச் சங்கம் பாரோர் பாராட்ட பணிகள் பல புரிந்து பயனுள்ள சங்கமாக மிளிர்வதற்கு வித்திட்ட பெருமையுடன், இறைவனடி சேர்ந்துள்ள உத்தமர்களை இக் கால் நூற்றாண்டு விழா கோலத்தில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தல் சிறப்புடைச் செயலாவதோடு, நன்றிக் கடைப்பாடு மறவாச் செயலாகவும் அமையும்.

இவ்வரிசைச் சிறப்பில் சங்கத்தின் காவலராய் பணியாற்றி இறைபதம் எய்திய இந்து மா மன்றத் தலைவரும் - உயர் நீதிமன்ற நீதியரசருமான அமரர் பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களையும் அவர் வழித்துணை நின்று பணி பல ஆற்றிய துணைவியார் கண்மணி அம்மையார் அவர்களையும், சங்கத்தின் ஸ்தாபகர் அமரர் வ. சிவஞானம் அவர்களையும், சங்கத்தின் முதுபெரும் முத்தலைவர்களாய் மிளிர்ந்த அமரர்கள் தி. பாலசுந்தரம், வை. நா. சோமசுந்தரம், அ. கந்தையா ஆகியோரையும் மற்றும் சங்க அங்கத்தவர்களாகவும் - ஆதரவாளர்களாகவும் இருந்து ஆதரவு நல்கி, அமரனடி சேர்ந்த சைவத் தமிழ்ப் பெருந்தகைகளையும். இவ் வரலாற்றுப் பெருமை மிக்க இவ் வைபவத்தில் நெஞ்சுருக நினைந்து நினைவு அஞ்சலி செலுத்துவதோடு அமையாது,

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக, சொல்லொணாத் துயர்பட்டு - அல்லற்பட்டு அமலனடி சேர்ந்த எமது உயிருக்கு உயிரான உடன்பிறப்புக்களையும் இச் சந்தர்ப்பத்தில், கன்னித் தமிழின் வளர்ச்சிக்காகவும் கால் நூற்றாண்டு காலம் பணியாற்றிய நன்றி மறவா சைவ முன்னேற்றச் சங்கம், நினைவு கூர்ந்து நினைவாஞ்சலி செலுத்துகின்றது.

– மணி மாஸ்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க வளர்ச்சியின் முன்னோடிகள்!

திருவாளர்கள்:

செ. இரங்கநாதன் Q. C.
ச. ஆறுமுகம்
வ. சி. செல்லையா
வ. செல்லத்துரை
க. முத்துக்குமாரசாமி
C. K. இரத்தினம்
சு. நவரத்தினம்
க. சோதிலிங்கம்
ராம.சுப, சேதுராமன் செட்டியார்
அ. இராஜரட்ணம்
சைவ இளவல் சி. திருநாவுக்கரசு
ச. அரியரத்தினம்
சு. லிங்கேஸ்வரன் (U. K.)
இ. பத்மநாதன் (U. K.)
ச. ஆனந்ததியாகர் (U. K.)
பொ. அழகேசன்
S. நாகேந்திரா
க. சபாபதிப்பிள்ளை
த. சிவலிங்கம்

திருவாளர்கள்

வி. சரவணமுத்து
க. தியாகராசா
ந. வே. கனகசபை
வ. செல்வரத்தினம்
சீ. இராசதுரை
க. வல்லிபுரம்
வே. சுப்பையா
பிரம்மஸ்ரீ. நா. மகாதேவாக் குருக்கள்
வே. சுப்பிரமணியம்
Dr. சி. வேலாயுதன்
சி. சிவராசா
சு. கந்தையா
சி. விமலநாதன்
மகேந்திரன்
வி. அம்பலவாணப்பிள்ளை
M. குமாரசாமி
கனகராசா
வி. விநாயகமூர்த்தி
வி. நடராசா
திருமதி சின்னத்தம்பி (லிப்டன்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமைநன் னெறிக் குய்ப்பது
வேதநான் கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.


சைவ முன்னேற்றச் சங்கத்தின்

# வெள்ளி விழா

சீரும் சிறப்புடனும் இனிது நிறைவுபெற

எமது வாழ்த்துக்கள்.

## ANANDHA STORES

Wholesale Dealers in Textiles

105, Bankshall Street, COLOMBO-11.

T.Phone: 27643 Cable: VINAYAGAR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Victoria Bakery & Groceries Ltd.

**and also for your Refreshments**

VISIT

# VICTORIA COOL SPOT

**148, Justice Akbar Mawatha,**

**Colombo-2**

With best Compliments

of

# NANDA BEEDI CO.,

**Mandandawele,**

**Matale.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

" திருவுங்கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம் "

பல இனமத மக்கள் மத்தியில் வாழும்
கொம்பனித்தெரு வாழ் சைவத் தமிழ் சிறுர்களுக்கு
எமது சமயத்தின் அருமையையும்
பெருமையையும் பேணி வாழ்வதற்கு
வித்திட்ட

**சைவ முன்னேற்றச் சங்கத்தின்**

# "வெள்ளி விழா"

**சிறப்புடன் இனிது நடைபெற வாழ்த்துகின்றேன்.**

By

A Well Wisher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில். "

Visit

For your Textile requirements

SELECTIONS

17, Ambagamuwa Road,

GAMPOLA.

WITH BEST COMPLIMENTS

FROM

OLYMPIC SMART HOUSE

235, Galle Road,

DEHIWELA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments

of

# VINOLIA BATIK GARMENTS

Manufactures of All Readymade Garments

Specialists in BRASSIERES, ELASTIC PADED BRA, PADED BRA & PLAIN

**60, 1/4, N. H. M. Abdul Cader Mawatha,**
(Reclamation Road)
**COLOMBO -11.**
SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே"

WHEN YOU ARE IN PETTAH
STEP INTO

# GENTS CORNER

149, Main Street, COLOMBO-11.

Phone: 25810



WITH BEST COMPLIMENTS

OF

# PRINCE TEXTILES

No. 81, 2nd Cross Street, COLOMBO-11.

Phone:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"" பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
'ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர்வன் தொண்டர் பதம்போற்றி
ஊழிமலிதிரு வாதவூரர்திருத் தாள் போற்றி! போற்றி!!

நால்வர் வழி நின்று நாட்டுக்கு நற்பணியாற்றும்

கொழும்பு-2

## சைவ முன்னேற்றச் சங்கத்தின்


# வெள்ளி விழா

இனிது நடைபெற எமது இதயங் கலந்த வாழ்த்துக்கள்.

# LINGHAM SILK HOUSE

**18, New Market, JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I. O. B. is always behind you

# INDIAN OVERSEAS BANK

"Overseas Building"
139, Main Street, COLOMBO-11

T. Phone: 24422
27364 (Manager)
T. Grams: 'OVERSEBANK'
Telex: Colombo 1287


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புறத்தூய்மை நீரான் அமையும்
அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

RAVI PACKING

180/6, Keyzer Street, COLOMBO-11.

FOR QUALITY TEXTILES

VISIT

RAM BROTHERS

140, Main Street, COLOMBO-11.

T. Phone: 20127

உ

"செங்கே ழுடுத்த சினவடிவேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிருதோளும் பதுமமலர்
கொங்கேய் தரளஞ் சொரியுஞ் செங்கோடைக் குமரனென
எங்கே நினைப்பினு மங்கேமுன் வந்தெதிர் நிற்பனே"

For Estate Requirements

Visit

S. Ramasamy Pillai & Son's

No. 1 & 2, Glenlyon Bazaar, AGRAPATANAI

Phone: 43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

" பூச இனியது நீறு புண்ணிய மாவதுநீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவா யான்திரு நீறே"

WITH THE BEST COMPLIMENTS

OF

# AJANTHA TEXTILES

35 B, Deans Road, Maradana,

COLOMBO-10.

உ

சிவநெறிக்கும் — செந்தமிழுக்கும் நற்பணியாற்றும்

சைவ முன்னேற்றச் சங்கத்தின்

"வெள்ளி விழா"

இனிது நிறைவுபெற எனது இதயம் கனிந்த வாழ்த்து.

By

A Well Wisher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற்

PUBLIC LIBRARY
JAFFNA.

தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கொடுக்கும் ஆதரவாகும்.

ஆதரவு பெருகுதல் அறப் பணிக்கே உதவும்.

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

கிளை: 79, மெசென்ஜர் வீதி,
கொழும்பு-12.
தொலைபேசி: 36063

த. பெ. இல. 77
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7233



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**For your Requirements**

**of**

**Motor Spares**

CONTACT

**MOTOR HOUSE LTD.,**

19, Armour Street, COLOMBO 12.

T.Phone: 31898

REMEMBER!

For Quality Textiles Footwear

& Fancy goods

*Vagini Stores*

150, Malay Street, COLOMBO 2.

*Visit*

*Nirmalas*

for

SHOES & FANCY GOODS

142, Malay Street, COLOMBO-2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

of

SUJATHA TEXTILES

82, 3rd Cross Street, COLOMBO-11.

Phone: 23215

With Best Compliments

of

LUCKY INDUSTRIES

Manufacturers & Distributors of

Motor Packings
Gaskets
Rubber Parts

For

Motor Vehicles
*Water Pump and*
Marine Auto Boart.

159, Peralanda, RAGAMA.

WITH THE BEST COMPLIMENTS

FROM

THE EXPORTERS OF

**Spices, Handicrafts, Coconut Products, Oil Seeds Betel nuts, Batiks, Gems & Tea etc.**

DHARMAPALA EXPORTS TRADE

126, 3rd Cross Street, COLOMBO-11. SRI LANKA. (Ceylon)

Phone: 24719 Office T. Grams: 'LANKAPRO'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

## RAJENDRA STORES

(Dealers in Groceries & Oilman Goods)

No. 5, Super Market, KOLLUPITIYA.

Telephone orders Accept & deliver to door step.

Telephone: 20657



உ

" அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

WITH THE BEST COMPLIMENTS

OF

## LADY'S CENTRE

No. 21. Deans Road, MARADANA.

T. Phone: 93605



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா

# திருமுருக கிருபானந்தவாரியாரின்

## வாழ்த்துரை.

நேரிசை வெண்பா

"தெய்வ நலங்கமழும் சீர்மா கொழும்பு நகர்ச்
சைவ முன்னேற்றத் தமிழ்ச் சங்கம் - வையமிசை
பல்லாண்டு வாழ்க பழனிக் குகனருளால்
எல்லா நலமும் இசைந்து''



வாரியார் எமது சங்க நிகழ்ச்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி பிரேமாத்மானந்தா அவர்களின்

## ஆசிச் செய்தி

உள்ளுவார் உள்ளத்தில் உறைந்து நின்று அருள் புரியும் ஈசனுக்குச் சிவம் என்ற பெயரிட்டு வழிபாடாற்றுபவர் சைவர். சிவமதம் என்ருல் அன்பு மதம் என்பதே பொருள். சிவனுறையும் சீவர்களிடம் அன்பு பூண்டு, அவர்களுக்குச் செய்யும் தொண்டே சிவ வழிபாடாகக் கொள்ளும் பண்பு சைவப் பண்பு. சீவர்களிடத்து அன்பு செலுத்தி அவர்தம் தொண்டுக்காகத் தம்மைத் தியாகம் செய்வோரே தொண்டர் எனப்படுபவர்.

இவ்வகைத் தொண்டை மேற்கொண்டு கடந்த 25 ஆண்டுகளாக சைவத்துக்கும், விசேடமாகக் கொம்பனித்தெரு சைவ மக்களுக்கும் தொண்டாற்றி வந்த 'கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்' தொடர்ந்தும் நற்பணி புரிய இறைவன் அருள் செய்வானுக,

அறிவும், ஆற்றலும், தூய்மையும், தீரமும் பொருந்திய தொண்டர் குழாம் முன்வந்தால் மட்டுமே பயன் கருதாமற் செய்யும் பணியைச் சீரிய முறையிற் செய்ய முடியும்

எனவே தொண்டர்கள் தமது சொந்த வாழ்க்கையிற் தூய்மையைக் கடைப்பிடிப்பதோடு பிறமக்கள் வாழ்வும் தூய்மையுறத்தக்க வகையிற் பணிபுரிந்து சைவத்தின் முன்னேற்றத்திற்கு உதவுவார்களாக. இதற்கான தெய்வீக சக்தியைக் கொடுத்தருள வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் ஈந்து மகிழ்கின்றேன்,

*சுவாமி பிரேமாத்மானந்தா*
தலைவர்
இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு
(ஸ்ரீ லங்கா கிளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி

# உயர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

## பிரார்த்தனை உரை.

தனி மனிதனுடைய வாழ்க்கையோ, ஒரு இனத்தின் வாழ்க்கையோ, சரீர வலிமையிலோ, சனப் பெருக்கிலோ, படைப் பலத்திலோ தங்கவில்லை. அவரவர் செய்யும் தவத்திலேயே தங்கி இருக்கின்றது. இந்த உண்மையை சைவ ஸ்தாபனங்கள் விளக்கம் செய்து வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக என்று திருவருளைப் பிரார்த்திப்போமாக.

சி. கணபதிப்பிள்ளை.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை பிரதிஷ்டா பூஷணம்

சிவஸ்ரீ

# ஐ. கைலாசநாதக் குருக்கள்

அவர்களின்

## ஆசிச் செய்தி

சைவ முன்னேற்றச் சங்கம் என்பதில் நடுவிலுள்ள முன்னேற்றம் என்ற சொல் சைவத்திற்கும் சங்கத்திற்கும் மத்தியில் நின்று இரண்டு பக்கத்திலும் சிங்க நோக்காக நின்று முன்னேற்றுகின்றது. சைவத்தை முன்னேற்றுவதற்காக அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் விநாயகர், நடேசர் மகா விஷ்ணு, நவக்கிரக, தனிச் சனீஸ்வரர், சூரிய, சந்திரர், பைரவர், நாயன்மார் முதலிய பரிவாராலயங்களைப் புதிதாய் அமைத்து குடமுழுக்கு விழா மிகவும் சிறந்த முறையில் நடாத்துவதற்கு இயன்ற உதவிகள் செய்தும் நால்வர் கோயில் மூர்த்திகள் கும்பாபிஷேகம் தங்கள் பொறுப்பில் சிறப்பாகச் செய்து சைவத்தை முன்னேற்றியது தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானின் ஆலய அறங்காவலர்களுடன் கும்பாபிஷேகத்தில் இயன்ற தொண்டுகள் செய்து சிறப்பித்தது.

இனி சங்க முன்னேற்றத்திற்காக நூற்றுக்கு மேற்பட்ட சைவப்பிள்ளைகளுக்கு தேவார வகுப்பு, சமய வகுப்புகள் வைத்து கல்வியூட்டி லீவு நாட்களில் [சனி, ஞாயிறு] தேவாரம், சமய பாடங்கள் கற்பித்து வருகின்றது.

விசேட தினங்களிலும் விழாக் காலங்களிலும்-பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் ஒழுங்காக நடாத்தி வருகின்றது. தேவாரமும் பஜனையும் கேட்போர் மனதை உருகச் செய்கின்றது,

இச் சங்கத்திற்குத் தலைமை தாங்குபவர் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜாவின் மகளாவார். அவர்கள் கண் வைத்திய சிகிச்சையில் மிகப் பிரசித்தி பெற்றவர். மேலும் சைவக் குருமாருக்கு இலவச சிகிற்சை செய்ததாகக் கேள்விப்பட்டு மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். அங்கங்களில் சிறந்ததும் பிரதானமானதும் கண்களே என்பார்கள். அதன்படி அவர்கள் இருளை நீக்கி ஒளி காண்பிப்பது போல் அக இருளை நீக்கி ஆன்ம ஒளியை ஊட்டுவதற்கு அவர்கள் தலைமையாய் இருப்பது பொருத்தமுடையதே. அவர்களுடன் சேர்ந்து சேவை செய்கின்ற அன்பர்களும் தங்கள் கடமை நேரம் போக மிகுதி நேரத்தை ஆன்ம லாபத்திற்கு ஏற்ற வழியில் செலவு செய்து வருவது போற்றற்குரியது. ஆகவே சைவ முன்னேற்றச் சங்கத்தாரின் தொண்டுகள் மென்மேலும் சிறப்புப் பெறவும் சைவத்தையும் சங்கத்தையும் தமிழையும் வளர்க்க இச் சங்கத்தாருக்கு மேலும் அருள்புரிய வேண்டுமென்று நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# *Message from the*

# Royal Nepalese Consul General

It is indeed a pleasure to give this short message on the Silver Jubilee Celebration of the Saiva Munnetta Sangam.

It is heartening to note that apart from the religious obligations, the Sangam is regularly involved in the upliftment of the under privileged in every way and is also busy in imparting religious knowledge to children - which is therefore filling a crying need of the day.

I wish that the activities of the Sangam grow from strength to strength.

*Dr. Subash Chawla*

PUBLIC LIBRARY
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கக் காவலரின்

# வாழ்த்துச் செய்தி

தலைநகரில் சைவத் தமிழ் மக்களின் மனத்தை மிகவும் கவரத்தக்க வகையில், சொல்லும் - செயலும் ஒருங்கே அமையப் பணியாற்றி வரும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளி விழாச் செய்தி அறிந்து மகிழ்வுறுகின்றேன்.

இச் சங்கம் குழந்தைப் பருவமாய் இருந்தகாலம் தொட்டு இற்றைவரை ஆற்றிவரும் அளப்பரிய சிவப்பணியை நான் பெரிதும் கண்கூடாக கண்டுள்ளேன். கண்டு உள்ளம் களித்துள்ளேன்.

குறிப்பாக பல இன மத மக்கள் மத்தியில் வாழ்ந்து வரும் எமது குழந்தைகள் மத்தியில், எமது சமயத்தின் அருமை பெருமையைப் பேணி வளர்க்க வித்திட்ட பெரும் பெருமையும் இச் சங்கத்தையே சாரும்.

பல ஆண்டுகாலமாக சங்கத்தின் காவலனுகப் பணியாற்றும் பாக்கியத்தைப் பெற்ற நான், என் வாழ்நாளில் இச் சங்கத்திற்கோர் பணிமனையை உருவாக்க உதவ வேண்டுமென எண்ணி, உருவான அம் மணி மண்டபம் இதுவரை சங்கப் பணிக்கு உதவவில்லையே என்று எண்ணும்போது மிகவும் வேதனையடைகின்றேன்.

திருவருளின் கடாட்சத்தால் மீண்டும் அம்மண்டபம் சங்கத்திற்குக் கிடைக்க வேண்டுமென இப்பொன்னுன நாளில் இறைவனடி இறைஞ்சுகின்றேன்.

அ. நவரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத் தலைவியின்
# ஆசிச் செய்தி

சைவ முன்னேற்றச் சங்கத்தின் இவ் வெள்ளி விழா ஆண்டில் சங்கத்திற்குத் தலைமை தாங்குவது என் பாக்கியம் எனக் கருதுகிறேன். இவ் இருபத்தைந்து ஆண்டுகள் தோறும் சங்கம் இந்துக்களுக்குக், குறிப்பாக சிறுருக்கு, சைவ சித்தாந்த மார்க்கத்தில் அளப்பரிய சேவை ஆற்றி வருவது யாவரும் அறிந்த விடயம். கொழும்பு 2ல் வீற்றிருந்து, பக்தர் பால் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கந்தவேளின் திருவடியில் செயற்படும் கருமங்கள் யாவற்றையும் சமர்ப்பித்துக் கடமையாற்றும் சைவ முன்னேற்ற சங்கத்தை மென்மேலும் ஓங்கி வளருமாறு முருகப் பெருமான் ஆசீர்வதிப்பார் எனப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்.

(திருமதி) டாக்டர் இ. ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம்
(F. R. C. S. Eng)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரட்டும் உங்கள் தூய தொண்டு

## (வ. சி. செல்லையா)

ஈழத் தலைநகருக்கே சிறப்பையும் சீரையும் தேடித்தரும் வண்ணம், தலை நகரின் மத்தியிலே சைவத் தமிழ் மக்களின் இரு கண்களாகத் திகழ்வதுதான் கொம்பெனித்தெரு சிவசுப்பிரமணியப் பெருமான் திருக்கோவிலும் - சைவ முன்னேற்றச் சங்கமும் ஆகும்.

குமரன் குடிகொண்டிருக்கும் சந்நிதியில் இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் இன்று வெள்ளி விழா கொண்டாடுவதையிட்டு அளவிலா ஆனந்தமடைகின்றேன்.

ஐயன் திருவடியில் இச் சங்கம் ஆரம்பித்ததினாற்தானோ, எத்தனை துன்பம், எத்தனை துயர். எத்தனை சோதனை, அத்தனைக்கும் ஈடு கொடுத்து இன்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி இலண்டன் மாநகரில் கூட கிளை பரந்து தலை நிமிர்ந்து தளிர்க்கின்றது.

தொண்டரணி - மாதரணி - மாணவர் அணி என மக்கள் பலம் பெற்று தன் மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு உழைக்கும் உயர்வின் காரணத்தினால் தான் இச்சங்கம் பலரையும் தன்பால் கவரக் கூடிய ஓர் பாசமிக்க இயக்கமாக - ஓர் சக்தி வாய்ந்த சங்கமாகத் திகழ்கின்றது.

என்போன்ற சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆரம்ப காலம் உறுப்பினர்களின் வாழ்நாளிலேயே, சங்கத்தின் வெள்ளி விழாவைக் காணக்கூடியதாகக் கொடுத்து வைத்தது நாங்கள் செய்த தவப்பயனே ஆகும்.

உன் வாழ்விலும் தாழ்விலும் உன்னை விட்டகலாத உயர் தொண்டர் சீருடைய சங்கமே, உன்னைத் தூற்றுபவர் தூற்றட்டும் - போற்றுபவர் போற்றட்டும், தொடரட்டும் உன் தூய தொண்டு!

வ. சி. செல்லையா
[முன்னாள் தலைவர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" சிவநெறிப்புரவலர் "

**க. கனகராசா** ஜே. பி. **அவர்களின்**

**(உரிமையாளர் மில்க் வைற் சோப் தொழிற்சாலை)**

# ஆசிச்செய்தி

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்னும் கோட்பாட்டினைச் செயலிற் காட்டி சென்ற இருபத்தைந்து ஆண்டு காலம் பணிபுரிந்த பழுதிலாத் திறத்தை வியந்து தங்கள் சைவ முன்னேற்றச் சங்கத்தை இன்னும் பல்லாண்டு காலம் பணிபுரிந்து இனிவருங் காலத்தையும் சிறப்பிக்குமாறு வாழ்த்துகின்றேன். வாழ்க உங்கள் சங்கம், வளர்க சைவமும், தமிழும். உய்வைத்தரவல்ல நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே.

தங்கள் அன்புள்ள,
க. கனகராசா
அதிபர்.

"திரு ஆலவாய்"
த. பெ. இல. 77,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதரணித் தலைவியின்

# மகிழ்ச்சிச் செய்தி



சைவ முன்னேற்றச் சங்கம் இவ்வாண்டு வெள்ளி விழாக் கொண்டாடுகின்றது.

இச் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகளாக, பிரதானமாக கொம்பனித் தெரு மக்களுக்கும், பொதுவில் கொழும்பு மாநகரத்தவர் யாவருக்கும் சிறந்த சேவை ஆற்றி வருகின்றது.

தொண்டரணி, மாதரணி மாணவர் மன்றம், முதலிய அங்கங்களைக் கொண்டு தாய்ச் சங்கம் சிறந்த சேவையாற்றி வருகின்றது. இவ்வாண்டில் மிகப் பொருத்தமாக இங்கிலாந்து வாழ் அங்கத்தவர் சிலர் சேர்ந்து கிளைச் சங்கமொன்றையும் உருவாக்கி விட்டனர்.

நவராத்திரி விழா நடாத்தும் பெண்களினதும் பிள்ளைகளினதும் பக்தியும் ஆர்வமும், திருவெம்பாவை நாட்களில் வீதி பஜனையில் பங்கு பற்றும் தொண்டரின் உற்சாகமும், சமய பள்ளிக்கூடம், சமயப் போட்டிகளில் பங்குபற்றும் பாலர்களின் ஊக்கமும், இச் சங்கத்துடன் சேர்ந்து இருக்கும் நம் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி கொடுக்கின்றன.

ஆல்போல் தழைத்து பல்லாயிரவருக்கு நிழல் கொடுத்துதவ ஈசன் முருகன் அருள் புரிவாராக.

வணக்கம்

சுசிலா தெ. மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'

# சைவ முன்னேற்றச் சங்க இங்கிலாந்துக் கிளை
# Saiva Munnetta Sanga England Branch

Bankers:
LLOYDS BANK LIMITED
(Billericay Branch)
ESSEX
ENGLAND.

46. STAFF HOUSES ROAD,
RUNWELL-WICKFORD,
ESSEX SSII 7PZ
ENGLAND



## உங்கள் நற்பணிக்கு எங்கள் நல்லாதரவு!

கடல் கடந்து வாழும் ஈழத்து சைவ மக்களின் ஒரே ஒரு சமய ஸ்தாபனம் தான், சைவ முன்னேற்றச் சங்க இங்கிலாந்துக் கிளை.

தாய்ச் சங்கத்தின் தங்கம் நிகர் கொள்கைக்குப் பங்கம் ஏற்படா வண்ணம் செயல்பட்டு வரும் எமது கிளைச் சங்கம், தன் பிரதிநிதி ஒருவரை இச் சரித்திரப் பெருமை மிக்க சங்க வெள்ளி விழாவில் கலந்து உதவ முடிந்ததையிட்டு பெருமை அடைகிறது.

எம்மையெல்லாம் நால்வர் வழி நின்று நாட்டுக்கு நற்பணியாற்றி, நல்லவர்களாக வாழ வழி வகுத்துத் தந்த எமது தாய்ச் சங்கத்தின் இலட்சியப் பணிகள் நிறைவுபெற எம்மாலான சகல உதவிகளையும் செய்யக் காத்திருக்கின்றோம் என்பதை இதய சுத்தியுடன் இவ் வெள்ளிவிழாத் திருநாளில் தெரிவிப்பதோடு எமது தாய்ச் சங்கம் பாரோர் புகழ பல்லாண்டு வளர பரமனடி இறைஞ்சுகின்றோம்,

நன்றி.

வ. இ. இராமநாதன் A.A.S.M.C., A.M. Ex. A. (Lond.) Dip. Ex.
(லண்டன் கிளைச் செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from

# Dr. S. B. Sri Skanda Rajah

It gives me great pleasure to send this message of greetings to you on this important occasion, your Silver Jubilee.

The good work that has been done by the Sangam, among the Hindus and other residents of Slave Island has endeared them to the community and earned their respect. The Sangam has also been in the forefront in all the religious activities of the Hindus in all areas of Colombo, and in many parts of the Island.

During my years of association with the Sangam, I had the pleasure of meeting and getting to know well, Many of the young people who are doing a grand job of work to help both the young and the not so young people of the community. I wish them every success.

Each one of us has a duty to realy to the community in which we live some of the many benefits we derive from it. Not only is such an attitude of mindbeneficial to the individual but also it will help us search and find ways and means of securing the progress and prosperity of the community.

The joy of giving is indeed a profound experience. To the able and tireless young men and women of the Siva Munnetta Sangam. It must be indeed a time of great joy to look back on twenty five years of selfless service.

I wish them the blessing of Lord Murugan and every success and prosperity in the years and ahead

S. B. Sri Skanda Rajah Ph. D (Cantab)

Kuala Lumpur.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்!

## மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம்

சைவம் தோன்றிய காலந்தொட்டு பல தாக்கங்களுக்கு ஈடுகொடுத்துத் தப்பிப் பிழைத்து வாழ்ந்து வருகிறது. சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட ஒரு சமயம் நமது சைவ சமயமே. அது அழிந்தொழிந்து போகவில்லை. எனினும் மெலிந்து — நலிந்து — தளர்ந்து காணப்படுகிறது. பாரின் பெருநிலப் பரப்பில் பரந்து வாழ்ந்த சைவ சமயம் இன்று சுண்டங்காய் நிலப்பரப்புக்குள் சுருங்கிக் கிடக்கும் நிலை. இந்நிலை ஏன் எம் சமயத்துக்கு ஏற்பட்டது? எம் சமயத்தவருக்குச் சமயத்தில் பற்றுப்பாசம் அற்றநிலை. ஏனோதானோ என்ற மனப்பாங்கு! எப்படியும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம். இதனால் தான் இன்று எமது சமயத்தின் கூனிக் குறுகிய நிலை.

சைவ சமயத்தை எவராலும் அழிக்க முடியாது - அழியாது என்று கூறுகின்ற ஒரு கூட்டமும் நம் மத்தியிலே உண்டு. இதுவரை பல நாடுகளிலே சைவசமயம் அழிந்து போன உண்மையை அவர்கள் மறுப்பதுமேனோ தெரியவில்லை. ''நமக்குள்ளே பழம் பெருமை பேசுவதில் மகிமையில்லை.''

அன்று போல் சைவத்தை வளர்க்க - காக்க இன்று நாயன்மார்கள் - அரசர்கள் - புலவர்கள் இல்லை. ஒவ்வொரு சைவனும் தான் இக் கடமையை மேற்கொள்ள வேண்டும்.

இதே நிலையில் கொழும்பு - கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் இயங்கிச் செய்து வரும் சேவை இமயத்தனையது. இருபத்தைந்து ஆண்டுகள் சேவையாற்றி வெள்ளி விழாக் கொண்டாடும் இச் சங்கத்தின் பெருமை எமக்கெல்லாம் வழிகாட்டி.

பல்லாண்டு பல்லாண்டு என்றும் நின்று நிலைத்து சைவ முன்னேற்றச் சங்கம் பணியாற்ற மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கத்தின் பாராட்டினையும் வாழ்த்தையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

இப்படிக்கு,
சிவதொண்டன்,
வி. த. குமாரசாமி
**(செயலாளர்)**

## வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்

'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் '' என்ற உயர் தத்துவத்திற்கு அமைய கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் ஆற்றிய அளப்பெரும் சேவையை நானும் எனது தலைமையின் கீழ் இயங்கும் வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம் மட்டுமன்றி, கொழும்பு வாழ் இந்துக்களும், பிற மதத்தவரும் நன்கு அறிவர். பல இன மதங்களுக்கு நடுவே அமைந்திருந்தும் கூட சைவ முன்னேற்றச் சங்கம் இந்து மக்களுக்கு ஆற்றி வரும் பங்கு அளப்பரியது மட்டுமல்ல போற்றுதற்கும் உரியது கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் ''ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி'' மென்மேலும் தம்பணி செய்திட மனமார வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

சொ. முத்து
**(தலைவர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சன்மார்க்கச் சங்கம்

உணுப்பிட்டி - வத்தளை.

நாவலர் பெருமான் காட்டிய வழியில் ஈழத்தின் தலைநகரில் அல்லல் பல கடந்து சைவப் பணியாற்றும் தங்கள் சைவ முன்னேற்றச் சங்கம் வெள்ளி விழாவைக் கொண்டாடும் செய்தி அறிந்து எமது சைவ சமய நண்பர்கள் மகிழ்வர் என்பது திண்ணமாகும். மிகவும் சிக்கலான பிரச்சனைகளின் மத்தியில் தங்களின் சங்கம் இயங்கி சைவப்பணியாற்றிய சாதனை இமயம் போன்றது. மேலும் மேலும் தங்கள் சங்கம் இறையருள் பெற்று சைவப் பணியாற்ற எமது உணுப்பிட்டி இந்து சன்மார்க்கச் சங்கச் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம்,
வீ. இ. இரத்தினசிங்கம்
(கௌரவ செயலாளர்)

## Colombo Divine Life Society

On behalf of the Colombo Divine Life Society I congratulate the Saiva munnetta Sangam, Colombo, on this happy occasion when it celebrates its Silver Jubilee. We have been following with appreciation the very good work the Sangam was doing for the better ment of the religious Social and Educational life of the people of its area. We are also aware that the Sangam has a few devoted workers who sacrifice their time energy and money in its service, and who form the back bone of the Sangam.

The situation in the country today is such that more and more of this good work, particularly in the field of religion, is needed to keep up the morale of our people.

We send our best wishes to the Sangam.

*A. C. Nadoraja*
(President)

## ஸ்ரீ சண்முகானந்தா கான சபை

பண்டாரநாயக்கா மாவத்தை - கொழும்பு 12.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் வெள்ளி விழாக் கொண்டாடுவதை அறிந்து பெருமகிழ்வடைகிறோம். சைவமும் தமிழும் புது மெருகுடன் ஏறு போல் வீறு நடையுடன் புத்தெழில் பெற்றுத் திகழ்வதற்கு அரும்பாடுபட்டு உழைத்து வரும் சமயத்தாபனங்களுள் கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம் முன்னணி வரிசையில் இருப்பதனைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறோம்.

சைவ முன்னேற்றச் சங்கம் ஆற்றிவரும் அளப்பரிய தொண்டு மேலும் சிறப்புற பண்டாரநாயக்கா மாவத்தை ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானது பூரண கிருப கடாக்ஷம் என்றும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை இந்து வாலிபர் சங்க அப்பர் அருள்நெறி மன்றம்

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த தமிழர் என்று போற்றிப் புகழப்படும் மொழி தமிழ் மொழியே. உலகில் பல்வேறு மொழிகள் இருந்த போதிலும் அம் மொழிகளுள் தமிழ் மொழியே முதன்மை வகிக்கின்றது.

இவ்வாறே சைவ சமயமும் சமயங்கள் வரிசையில் முதன்மை வகிக்கின்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய நாயனுர்கள் தேவாரம் பாடினுர்கள். அவர்களுக்கு முன்பு இராவணன் இருந்தான். தன் வீணையிலே சாம வேதத்தை யமைத்து சிவன் பால் அர்ச்சித்தான். இவனுக்கு முன்பும் அகத்திய மாமுனிவர் இருந்தார். இவ்வாறு ஒருவர் ஒருவராக சமயத்தை பாடியும் புகழ்ந்து பேசியும் சமயத் தொண்டு புரிந்து இறையருள் எய்தியுள்ளனர்.

அவர்கள் அடிச் சுவட்டைப் பின்பற்றி சைவ நீதி தழைத்தோங்க சைவ முன்னேற்றச் சங்கம் சென்ற 25 ஆண்டுகளாக தொண்டாற்றி வருகிறது.

வெள்ளி விழாவினைக் கொண்டாடும் இச் சைவ முன்னேற்றச் சங்கம் மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்குமாறு தொடர்ந்து சமயத் தொண்டாற்ற இறைவன் திருவருள் பாலிப்பாராக.

## ஸ்ரீ வரதராஜ விநாயகர் தொண்டர் சபை

சைவம் வளர, பண்பு மிளிர, அன்பு தழைக்க, 'மலிவளம் சுரக்க', நாடு செழிப்புறத் தாங்கள் ஆற்றி வரும் தொண்டு, மனிதப் பிறப்பின் மாண்பை யாம் அறியச் செய்யும், இப் பிறப்பில், 'தானம் தவம்' என்பனவற்றைப் புரியத் தூண்டும், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' உறுதுணை புரியும். 'இப்பிறவி தப்பினுல் எப் பிறவி வாய்க்குமோ' என்பதனை உணரச் செய்து, 'நல்லோரிணக்கமும் - நின் பூசை நேசமும்' என்ற அமுத மொழிக்கு எம்மை எல்லாம் ஆளாக்கும். வாழ்க சைவம், வாழ்க வையம், வாழ்க சைவத் தொண்டு, வளர்க சைவ முன்னேற்றச் சங்கம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

க. சி. சண்முகம்
(தலைவர்)

105, Kotahena Street,
Colombo-13.

PUBLIC LIBRARY
JAFFNA.

## ஆத்மஜோதி நிலையம்

சிவத்தை முன்னிட்டு பிறந்தது சைவம்
சைவத்தில் பிறந்தோர் பெருகிய தவத்தர்
சிவமயம் என்பது சிவத்தைக் காணல்

கொம்பனித் தெருவின் சைவச் சங்கம்
சைவர் வாழச் சைவம் வாழும்
என்றே வாழ்த்தும் எங்கும் வாழ்த்துதும்

சிவமே அன்பாம் அன்பே சிவமாம்
மைவரு கண்டன் மகிழ்வுடன் காப்பன்
பவமலம் என்பது அதற்கு மாறு

இம்மா நிலத்தில் முன்னேற்ற முடையது
சைவம் வாழச் சங்கம் வாழும்
நன்றே வாழ்த்தும் நானிலம் மகிழ!

அன்பு
நா. முத்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொரிங்டன் - அருள்மிகு திரு முருகன் ஆலய திருப்பணிச் சபை

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்,' என்ற உயர் தனிக் கொள்கையின் வழிநின்று அன்பால் அகிலத்தை அணைத்து அருள் செய்யும் சைவத்தின் தத்துவத்தைப் பரப்பி வரும் எண்ணிறந்த இயக்கங்களில் ஒன்றான கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளி விழாவினை வாழ்த்தி வரவேற்பதில் எமது திருப்பணிச் சபை பேருவகை பெறுகின்றது.

காலத்தை வென்று ஞாலத்தில் நிலை பெற்ற எம் இனிய தமிழ் மொழியின் வளர்ச்சியிலே சைவ சமயத் துறவிகள் ஆற்றிய பணி அளவிடற்கரியது.

எல்லாந் துறந்து இறைபணி செய்யும் மனமுடைய துறவு நிலையுடையோர் அருகிவரும் இக் காலத்தில் பலதுறையிலும் வாழ்க்கை அமைத்துக் கொண்டோர் இணைந்து இயங்கும் இயக்கங்களே அப்பணியினைச் செய்ய வேண்டியுள்ளது.

அந்த வழியிலே சைவ முன்னேற்றச் சங்கம் செய்து வரும் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் வளமுற்றோங்க வாழ்த்துகின்றோம்.

வணக்கம்.

வெல்க சைவ நீதி! வளர்க சைவத் தமிழ்!!

பணிவன்புள்ள,

மா. செ. சுப்பையா,
(தலைவர்)


**எங்களுக்கு விளம்பரம் தந்துதவியவர்களை மேன்மைப் படுத்துங்கள்!**

அவர்கள் உதவி எங்களுக்கு !

உங்கள் உதவி அவர்களுக்கு !!

**சைவ முன்னேற்றச் சங்கம்**

கொழும்பு 2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " வெள்ளி விழாக் கோலம் "

## ( ம. சி. சிதம்பரப்பிள்ளை )

பன்னூற்றாண்டு வாழ்ந்து பல நூற்றாண்டு விழாக்கள் காண இருக்கும் சைவ முன்னேற்றச் சங்கம், முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடிய பின், பள்ளிப் பருவம் எய்திய பால் மணம் மாறாப் பாலர்களுடன் பழகிப் பசுந் தமிழ் கற்று, 'நால்வர் நெறி' நின்று நல்லன செய்து, நாட்டார் மெச்ச நால்வர் பாடசாலை கண்டு பயிற்றுதல் நடாத்தி, சமய குரவர்கள், சந்தான குரவர்கள் சமயப் பெரியார்களின் விழாக்கள் கண்டு, அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமிகள் பொன்னார் திருவடிகள் பற்றி, அருந்தொண்டுகளாற்றி, இருபத்தைந்தாண்டைத் தாண்டி, இன்று — இத்தினம் — நல்விழாக் கோலம் — வெள்ளி விழாக் கோலம் — பூண்டனர். பூரிப்பெய்தினர் — பேசவும் பெரிதே!

பத்தாண்டுக்கு மேலாகத் தொடர்பு கொண்டு மழை, வெயில், காற்று என்றும் பாராது, உயர்வு தாழ்வு, கௌரவம், அகௌரவம், பசி, தாகம் ஆகிய இன்னோரன்ன இடிபாடுகளுக்கிடையில் யானும் ஒருவனாக இனிய இளைஞர்களுடன் கைகோர்த்து நின்று, இன்று வெள்ளி விழாக் கோலம் எடுக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்தை பாரோர் புகழும் தரத்துக்கு உயர்த்தப் பாடுபட்டவன் என்பதில் பெருமையுறுகின்றேன்.

இச்சங்கத்துடன் சங்கமமாகி உயிரும் உடலுமாக — ஊண் உறக்கமின்றி, மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, சங்கத்தைத் தங்களது இல்லமாக, தங்களது கோவிலாக, தங்களது உடலாக, தங்களது உயிராக மதித்து — அல்லும் பகலும் அயராது உழைத்த — உழைக்கும் தலைவர்கள், கௌரவ காரியதரிசிகள், நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், அனுதாபிகள் யாவரும் இன்று வெள்ளி விழாக் காணும் பெரும் வாய்ப்பினை, குன்றுதோறாடும் வள்ளி மணாளன், கொம்பனித்தெருவாழ் சேவற் கொடியோன் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி அருள்பாலித்துள்ளார்.

மனிதப் பிறவி பெற்ற நாம் மனிதனாக வாழ வேண்டாமா? இறைவன் இவ்வுடலை எமக்களித்ததற்கமைய இறைவனை ஏற்றாது வாணாளை வீணாளாக்கலாமா? ''நின்றும் இருந்தும் கிடந்தும் நினை சிவன் தாள்'' என்றல்லவா அறிவுரை பகரப்பட்டுள்ளது. இறையுணர்வு எமக்கு ஏற்படுவது எமது தவப் பணிகளினால். தவமும் தவமுடையார்க்கே. ஆகவே எமது சொந்தப் பணிகளோடு அமைதி பெறாது, சமூகப் பணிகளிலீடுபடுதல் இறைவனுக்கு அடிமை பூண்டு ஒழுகுதலை நிகர்க்கும். எங்கள் நாயன்மார்கள் எவ்வாறு சமூக மக்களோடு இணைந்து இறைபணி செய்து பிறவி வேரறுத்தார்கள் என்பதற்கு பெரிய புராணம் வரிவரியாக விரித்துரைக்கின்றது. பஞ்சத்தால் வாடிய மக்களுக்குப் பசிப்பிணி போக்கியும், கொடு நோய்களினால் வாடினோரை அந்நோய்களிலிருந்து களைந்தும், இறைவனில் நம்பிக்கை இழந்த நாட்டு மன்னர்களுக்கு இறைவனது இன்னருளைப் பெற்றீய்ந்தும், இன்னோரன்ன அருந்தொண்டுகளை ஆற்றி அழியாய்ப் பெரும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். அவ்வழி வந்த நாம் போகும் வழி அதே வழி தான். இதனை நன்குணர்ந்த சைவ முன்னேற்றச் சங்கம் சென்ற கால் நூற்றாண்டு காலம் கண்ணுங் கருத்துமாகச் சேவை செய்து, இப்போது வெள்ளி விழாக் கோலம் காண்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பிறருக்கு ஒரு உதவி செய்யும் போது அந்த உதவியினால் வரும் பயன் எமக்கே வந்தடைகின்றது. அது எப்படியோவெனில், தாளுண்ட நீரைத் தலையாலே தரும் தென்னை மரம் போன்று எனலாம்.

தற்புகழ்ச்சியற்று ஆற்றும் தருமங்கள் நாம் போகும் நெடுவழிக்குத் தண்ணீர்ப் பந்தலாகவும், சோலைகளாகவும், தர்மசாலைகளாகவும் மாறுகின்றன. இதனை நன்குணர்ந்த சைவ முன்னேற்றச் சங்கத்தை நாம் எவ்வாறு பாராட்டினாலும் அது மிகைப்படாதொன்றெனலாம்.

இச் சங்கத்துக்குத் தலைமை தாங்கிச் சென்ற பல வருடங்களாக அருந் தொண்டாற்றிவரும் பெருமைக்குரிய மங்கையர்க்கரசி — வைத்திய-கலாநிதி— ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம்.

கௌரவ காரியதரிசியாகப் பெரும் பணி பூண்டு, சங்கத்தின் உயிர் நாடியாக, உயிர் மூச்சாக, அதனுடைய மூளையாக, இரத்தமாக, நரம்புகளாக, அதுவாகவே ஆடித் திரியும் 'மணி மாஸ்டர்' என அன்போடு யாவராலும் அழைக்கப்படும் எனது தம்பி பாலசுப்பிரமணியம்.

அல்லும் பகலும் மாலைகட்டி, கோவில் கூட்டி தோரணம் போட்டு, சங்கப் பணிமனைக் காவலனாகப் பணிபுரிந்து, சங்கத்தைச் சங்கமாக்கிய அன்புப் பெரியார் வ. சி. செல்லையா.

சங்கத்தின் வெள்ளி விழாவுக்கு விசேடமாக லண்டன் மாநகரிலிருந்து வருகை தந்த தம்பி இராமனுதன் — இவர் உண்மையாக வாழ்ந்து மறைந்தும் மறையாத மாமேதை இராமனுத வள்ளலை எங்கட்கு ஞாபகப்படுத்தி நிற்கின்றார்.

" பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே "

என்ற பொன் வாக்கியத்துக்கமைய எமது இளவல் இராமநாதன் தமது இராமனுதன் தமது ஊதியத்தில் ஒரு பாகத்தை எமது சங்கச் சிறார்களுக்கு தாரை வார்த்துள்ளார்.

இன்னும் எத்தனையோ — எத்தனையோ — அறம் வளர்த்த அன்பர்கள் வாழ்ந்து சேவைகள் பல புரிந்து சேவற்கொடியோன் சீரடியடைந்தோர்கள்!

யாவரையும் இங்கு கொலுவைக்க மனமிருந்தும் இடம் தராத வகையில் இவர்கள் யாவரையும் சைவ முன்னேற்றச் சங்கம் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி வணங்குகின்றது.

சங்கத்தின் சரித்திரம் கூறும் சரித்திரகாரர்களே! இலங்கையில் சமய ரீதியான சங்கங்கள் பலவுள்ளன. இவைகளுள் சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு வேறு ஒரு சங்கமும் ஈடும் இணையும் இல்லை என்பதனை மாத்திரம் கூற விழைகின்றேன். இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பணியாற்றும் சைவ முன்னேற்றச் சங்கம்

## ( சிவஞானவாரிதி கு. குருசுவாமி )

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் கொழும்பு வாழ் சைவ மக்களிடையே அளப்பரிய சைவப் பணியாற்றி வருவதைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ள அனைவரும் நன்கு அறிவர். நால்வர் சமயப் பாடசாலை ஒன்றினை ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒழுங்காக நடத்தி மாணவர் மத்தியிலே சமய அறிவு ஊட்டி வருவதும், சமய குரவரது குருபூசைத் தினங்களிலே பண்ணிசைப் போட்டி வைத்துப் பண்ணிசைப் பயிற்சியில் ஊக்கமளித்து வருவதும், நாவலர் குருபூசைத் தினத்திலே நாவன்மைப் போட்டி வைத்து நாவலர் பணியினை நன்கு மதித்துச் சிறுவர் மத்தியிலே நாவலர் பெருமானை நினைவுகூர வைத்தும், நவராத்திரி விழாக் காலத்திலே நாள்தோறும் சிறப்புச் சொற்பொழிவுகள், ஒழுங்கு செய்து சங்க மாணவரையும் பேச்சிலே பங்குபெறும் வண்ணம் ஏற்பாடுகள் செய்து மார்கழி மாதம் திருவெம்பாப் பூஜைக் காலத்திலே வீதிகள் தோறும் அதி காலையிலே மாணவ மாணவியரை அழைத்து வீதி பஜனை செய்தும், இன்னோரன்ன பல வழிகளிலும் சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடு பட்டு உழைத்து வருவதை எழுத்துருவிலே பதிவு செய்வதிற் பெரு மகிழ்வடைகிறேன்.

ஆத்மீக சக்தியை வளர்த்துக் கொள்வதன் மூலம் இவ்வுலகிலே மனித சக்தியால் இலகுவில் சாதிக்க முடியாதவற்றையும் செயற்படுத்த முடியும் என்பதை நன்கு உணர்ந்த சங்கம் தெய்வீகப் பணியில் ஈடுபட்டுச் சங்க உறுப்பினர் அனைவரையும் இத் தூய பணியில் பங்கு கொள்ளச் செய்து வருவது போற்றிப் பாராட்ட வேண்டியதொன்றாகும். வேல் விழாக் காலத்திலே, கலியுக வரதனும் கந்தன் புகழ் மாலைகளை அடியார் புடைசூழச் சித்திர தேர் வீதியுலாப் போகும்போது பக்தி ரசம் பொழியப் பாடி வரும் பணியிலே சங்கம் ஈடுபட்டு வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திலும் சங்கம் தன்னாலியன்ற சைவப்பணி புரிந்து வருவதுடன் வெள்ளி விழா எடுக்கும் இச் சந்தர்ப்பத்திலே, அருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானது பரிபூரண கிருபாகடாக்ஷம் சங்கத் தலைவி திருமதி சிவயோகம், ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கும், பொதுச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும், ஏனைய தொண்டர் அணி, மாதர் அணித் தலைவியர், உறுப்பினர், சங்கத்துடன் சைவப் பணி, தமிழ்ப் பணியில் ஈடுபட்டு உழைத்துவரும் அன்பர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்றும், சங்கப்பணி தொடர்ந்து பேரூக்கத்துடன் புத்தொளி பெற்றுத் திகழ்வதற்கும் என்றென்றும் கொம்பனித்தெரு வாழ் சைவப் பெருமக்களுக்கு மட்டுமின்றி இலங்கை வாழ் சைவத் தமிழ் மக்களுக்கு ஒரு முன்மாதிரியான வகையிலே சங்க உறுப்பினர் சைவப் பணியுடன் தமிழ்ப் பணியையும் செய்து வரத் தமிழ்த் தெய்வமாகிய கலியுக வரதனும் கந்தப் பெருமான் கருணை பொழிய வேண்டுமென அப்பெருமான் கழலிணைகளைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saiva Munnetta Sanga England Branch

**Members of the Executive Committee for the First year 1977/78**

*President:*

THE PRESIDENT OF HEAD QUARTERS
Saiva Munnetta Sangam - Colombo.2.
Sri Lanka (Ceylon)

Dr(Mrs.) I. SRI SKANDA RAJAH SIVAYOHAM. M.B. F.R.C.S (Eng)
31. Guildford Crescent, Colombo. 7, Sri Lanka (Ceylon)
